**M.C.O.P. No.21/2021**
**P.W.1 திருமதி.ஆதம்மாள்**
**Date : 01.03.2024**

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் கணவரை மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். அங்கு என் கணவரை பரிசோதனை செய்த மருத்துவர் என் கணவரும் உடன் பயணம் செய்த கற்பக பாண்டியனும் விபத்து சமயத்தில் மது போதையில் இருந்ததாக சொன்னார் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுவதற்கு இருசக்கர வானத்தை ஓட்டிய கற்பக பாண்டியன் ஒரு காரணம் என்றால் சரியல்ல. TN 63 AA 4596 இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும் காப்பிட்டு நிறுவனத்தையும் சேர்க்காத காரணத்தினால் மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்து குறித்து போலிசார் விசாரித்தார்கள். என் கணவருக்கு தலையில் மற்றும் கண்ணில் ஏற்பட்ட காயத்தினால் இறந்தார்என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது என் கணவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்று விசாரித்ததை வைத்து தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. மசாஆ 13 Work Permit ன்படி என் கணவரின் பிறந்த தேதி 25.06.1967 என்றால் சரிதான். மசாஆ 13 ன்படி விபத்தின் போது என் கணவருக்கு 46 வயது என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் என் கணவரின் வயது 40 என்று 2வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரிதான். மசாஆ 13 ஆவணத்திற்கு 23.03.2011 ம் தேதி விண்ணப்பம் கொடுக்கப்பட்டு, 20.03.2012ம் தேதி மசாஆ 13 ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மசாஆ 13 ஆவணத்தின் Expiry date 23.03.2013 என்றால் சரிதான். என் கணவர் Work permit வழங்கிய நாள் முதல் சிங்கப்பூருக்கு திரும்பி வந்த பிறகு தான் விபத்து நடந்தது. அவ்வாறு என் கணவர் சிங்கப்பூருக்கு பயணம் செய்ததாக மசாஆ 12 பாஸ்போட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி என் கணவர்

சிங்கப்பூரில் பணிபுரிந்து வந்தது சம்பந்தமாகவும் மாதம் ரூ.40000/- மற்றும் ரூ.50000/- சம்பாதித்து வந்தது சம்பந்தமாகவும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வாங்க முடியவில்லை. நான் சொல்வது போல் என் கணவர் வெளிநாட்டிற்கு பயணம் செய்யவில்லை என்றும் ரூ.40000/- ரூ.50000/- சம்பாதித்து அனுப்பவில்லை என்றும் நான் மனுவில் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றாலும் சரியல்ல.